# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.17/2025

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் சங்கர் வா.சா.–1

த/பெ.

கிராமம் தொழில்

தாலுகா வயது

---

முதல் விசாரணை 05–03–2026.

நான் இந்த வழக்கின் வாதியின் வங்கியில் முதன்மை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வாதி தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 10.08.2016 ம் தேதிய பிரதிவாதிகள் தாக்கல் செய்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 31.03.2017 ம் தேதிய கடன் அனுமதி மெமோரண்டம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 31.03.2017 ம் தேதிய பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த கல்விக்கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 31.03.2017 ம் தேதிய ஒப்புதல் கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பிரதிவாதிகள் செய்துகொண்ட ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 31.03.2017 ம் தேதிய Attestation கடிதம் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 31.03.2017 ம் தேதிய அபிடவிட் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 31.03.2017 ம் தேதிய Execution of document letter அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 01.03.2021 ம் தேதிய பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட கடன் சம்பந்தமான ஒப்புதல் கடிதம் அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 26.02.2024 ம் தேதிய பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட கடன் சம்பந்தமான ஒப்புதல் கடிதம் அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 07.11.2023 ம் தேதிய கணக்கு அறிக்கை அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.05 16:02:10 +0530